கடந்த 09.05.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.10/2025 dated 04.07.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. எனது சொந்த ஊர் என்னவென்றால், மணவாளக்குறிச்சி ஆகும். 8098239129 என்பது என்னுடைய தொலைபேசி எண் என்றால், சரிதான். மேற்படி தொலைபேசி எண்ணிற்கு அருமனை காவல்நிலையத்தில் இருந்து அழைத்தார்களா என்றால், இல்லை. எனது மனைவியின் பெயர் என்னவென்றால், சுபேதா பீவி. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால், 6 குழந்தைகள். அதில் 4 ஆண் மற்றும் 2 பெண்பிள்ளைகள் ஆகும்.

2. என்னுடைய இரண்டாவது மகனின் மனைவியின் பெயர் சல்மா என்றால், சரிதான். எனது 2 வது மருமகள் சல்மாவின் அம்மாவின் பெயர் நிஷா முகமது என்றால், சரிதான். நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால், முதலில் நான் வெளிநாட்டில் இருந்தேன். 2013ம் வருடம் நான் இங்கு வந்தேன். அதன்பிறகு நான் எந்த வேலையும் செய்யவில்லை. எனக்கு எந்த வகையில் வருமானம் வருகிறது என்றால், நான் வெளிநாட்டில் பணிபுரிந்த போது சம்பாதித்த பணத்தில் இருந்து வருமானம் வருகிறது.

3. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால், அந்த அளவிற்கு வழி இல்லை. எனவே செலுத்தவில்லை. எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால், SBT, மணவாளக்குறிச்சியில் கணக்கு உள்ளது. தற்சமயம் அது SBI வங்கியுடன் இணைந்துள்ளது. எனவே எனக்கு SBI, மணவாளக்குறிச்சியில் கணக்கு உள்ளது.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், எனது 2 வது மருமகள் சல்மாவின் அம்மா நிஷா முகமது மூலம் தெரியும். எனக்கு எத்தனை வருடங்களாக குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் பழக்கம் என்றால், 2020ம்

வருடத்திலிருந்து பழக்கம் ஆகும். இவ்வழக்கை தவிர்த்து வேறு கொடுக்கல் வாங்கல் குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் எனக்கு இல்லை என்றால், சரிதான்.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் சொந்த இடம் எது என்றால், திருத்துவாபுரம் ராஜு நகரில் வாடகை வீட்டில் இருந்தார்கள். வேறு எதுவும் எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் சாதாரண பாமர மக்கள் என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கணவர் மீன் சம்மந்தமான தொழில்களை செய்து வருகிறார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால், தெரியாது.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால், 2 பிள்ளைகள். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த சமூகத்தினை சேர்ந்தவர் என்றால், அவரது தந்தை மோகனனை எனக்குத் தெரியும். அவர் தோபி (சலவை) வேலை செய்து வருவதால் அவர் அந்த சமூகத்தை சேர்ந்தவராக இருப்பார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன படித்துள்ளார் என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஆங்கிலம் அவருக்கு தெரியும். என்னிடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆங்கிலத்தில் பேசியுள்ளாரா என்றால், இல்லை.

7. நான் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் முகவரியை குறிப்பிட்டதற்கு அவர் அங்கு தான் வசித்து வந்தார் என்பதை நிரூபணம் செய்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தற்சமயம் எங்கு வசித்து வருகிறார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது.

8. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால், 15.09.2020 அன்று ஆகும். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால், நான் பணம் கொடுப்பதற்கு முன்னால் பார்க்கும் போதெல்லாம் கேட்டார். மேற்படி விவரத்தை நான் புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

9. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எதற்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால், தொழில் நஷ்டத்திற்காக கேட்டார். மேற்படி விவரத்தை நான் வழக்காவணங்களில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் எந்த தேதியில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுக்க சம்மதித்தேன் என்றால், அது சரியாக எனது நினைவில் இல்லை. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணத்தை வட்டிக்கு கொடுத்தேன் என்றால், இல்லை.

10. குற்றம் சுமத்தப்பட்ட நபர் பணத்தை வாங்க எனது வீட்டிற்கு வரும் பொழுது தனியாக வந்தார் என்றால், சரிதான். அப்பொழுது என்னுடன் எனது குடும்பத்தார்கள் இருந்தார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது வீட்டிற்கு எந்த வாகனத்தில் வந்தார் என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

11. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுக்கும் பொழுது எந்த Denomination–ல் கொடுத்தேன் என்றால், ஆயிரம் மற்றும் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். மொத்த நோட்டுகளின் எண்ணிக்கை எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எவ்வாறு பணத்தை எடுத்துச் சென்றார் என்றால், அவர் கொண்டு வந்த பையில் எடுத்துச் சென்றார்.

12. நான் கொடுத்த பணத்தை குற்றம் சுமத்தப்பட்ட நபர் எண்ணிப் பார்த்தாரா என்றால், இல்லை. நான் 6 லட்சம் ரூபாயை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எங்கிருந்து எடுத்துக் கொடுத்தேன் என்றால், வீட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தேன். 6 லட்சம் ரூபாயை நான் வங்கியில் இருந்து எடுக்கவில்லை என்றால், சரிதான்.

13. மேற்படி பணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால், நான் 2020ம் வருடம் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் வீடு விற்ற பணம் ஆகும். வீடு விற்பனை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கொடுத்த பணத்தை கேட்டேனா என்றால், 1 வருடம் 2 மாதங்கள் கழித்து நேரில் திருத்துவாபுரம், ராஜு நகரில் உள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிற்கு சென்று கேட்டேன்.

14. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த தேதியில் என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால், 25.02.2022 அன்று அவரது வீட்டில் வைத்து என்னிடம் 07.04.2022ம் தேதியிட்டு காசோலை கொடுத்தார். நான் வழக்காவணங்களில் 07.04.2022 தேதியிட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர் காசோலை கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

15. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டிற்கு நான் சென்று பணம் கேட்கும் பொழுது அவர் என்னை வரவேற்றாரா என்றால், இல்லை. சிறிய தகராறு நடந்த பிறகு தான் இந்த தேதியில் நான் பணம் கொடுப்பேன் என்று காசோலையை கைப்பட எழுதி கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ளது குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கையெழுத்து என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் குற்றம்

சுமத்தப்பட்ட நபர் நிரப்பிய எழுத்துகளில் M என்ற எழுத்து கையெழுத்திலும் கையொப்பத்திலும் வித்தியாசமாக உள்ளது என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

16. காசோலையில் உள்ள தேதி முத்திரையில் பதிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கறிவிப்பை குற்றம் சுமத்தப்பட்ட நபர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்திற்கும் காசோலையில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால், அது எனக்குத் தெரியாது. வழக்கறிவிப்பில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியாது என்றால், சரிதான்.

17. நான் வங்கியில் சென்று செல்லான் நிரப்பி பணம் எடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால், இல்லை. Ex.P2 செல்லானில் வங்கி முத்திரை இல்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு அனுப்பிய வழக்கறிப்பில் 27.04.2022 என்று Ex.P6–ல் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது என்றாலும் ஆனால் வழக்காவணங்களில் 26.04.2022 என்ற தேதியில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வழக்கறிவிப்பை பெற்றுக் கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

18. நான் சொல்வது போல் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபரை இவ்வழக்கில் சேர்த்து பணலாபம் அடையும் நோக்கில் போலி முகவரிக்கு வழக்கறிவிப்பு அனுப்பி அதனை பெற்றது போல் காட்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு அழைப்பாணையும் அதே முகவரிக்கு அனுப்பி குற்றம் சுமத்தப்பட்ட நபரை கஷ்ட நஷ்டப்படுத்தியுள்ளேன் என்றாலும், சரியல்ல.

19. நான் தாக்கல் செய்த முகவரியில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வசிக்கவும் இல்லை என்றாலும் அவருக்கு அந்த முகவரி தெரியாது என்றாலும், சரியல்ல. எனது 2வது மருமகள் சல்மாவுக்கும் எனது மகனுக்கும் குடும்ப பிரச்சனை என்றால், இல்லை. எனது 2வது மருமகள் சல்மாவின் அம்மா நிஷா முகமது இரவி புதுக்கடை என்ற ஊரில் நிலா Social service and charity trust என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் பணிபுரிந்தார் என்றால், அதுப் பற்றி எனக்குத் தெரியாது.

20. மேற்படி தொண்டு நிறுவனத்தில் கிராமப்புறங்களில் ஏழைப் பெண்களுக்கு சுயதொழில் செய்வதற்கு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டது என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அதில் ஒரு சுய உதவிக் குழுவான சூரியகாந்தி

சுயஉதவிக் குழுவில் நிஷா முகமது தலைவராக இருந்தார் என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

21. மேற்படி சுயஉதவிக் குழுவில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மற்றும் அவரது தாய், தங்கை மற்றும் அருகில் உள்ள ஷீலா ஆகியோர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றாலும், அந்த சுயஉதவிக் குழுவில் கடன் பெறுவதற்காக மேற்படி நிஷா முகமது வேண்டுகோளின் அடிப்படையில் வங்கி நடைமுறைகளை பூர்த்தி செய்வதற்காக தேதி மற்றும் பணவிவரம் நிரப்பப்படாமல் கையெழுத்திட்ட காசோலை ஒன்றை நிஷா முகமதுவிடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்து அந்த வங்கிக் காசோலையானது இவ்வழக்கு காசோலையாகும் என்றாலும், மேற்படி நிஷா முகமது கூறியதன் பேரில் எனது வங்கிக் கணக்கில் மேற்படி 50 ஆயிரம் ரூபாய் கடனாக செலுத்தப்பட்டது என்றாலும், அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

22. எனது மகனுக்கும் எனது மருமகளுக்கும் இடையே ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக அவர் வெளியே சென்ற காரணத்தினால் அவர்கள் விட்டுச் சென்ற ஆவணத்தை நான் திருடி இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் பல காசோலை வழக்குகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், இல்லை. நான் பணம் கொடுத்தது மற்றும் காசோலை வாங்கியதாக சொல்லப்படும் காலங்கள் கொரோனா காலக்கட்டம் என்றால், சரிதான்.

23. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.